JUDICIAL FORM NO.53
{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC//563/2024 |
| | : | Prosecution P.W - 60 |
| NAME | : | ஜெயக்குமார் |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Thursday 09.04.2026

**முதல் விசாரணை**

நான் தற்போது அரியப்பபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் இபியில் பணிபுரிந்து ஓய்வு பெற்று தற்போது அரியப்பபுரத்தில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். எதிரிகள் சீட்டு பிரித்தார்கள். நான் சீட்டு போட்டிருந்தேன். அசா.1 கிருஷ்ணன் என்பவரை தெரியாது. அசா.2 அந்தோணிராஜ் என்பவரை தெரியும். அசா.3 டேவிட் அமல்ராஜ் தெரியும். அசா.4 செல்வராஜ் தெரியாது. அசா.5 ஜோசப்ராஜ் என்பவரை தெரியும். அசா.6 அருமைகிளியை தெரியாது அசா.7 பாலமுருகன் தெரியாது. அசா,8 செல்வராணி என்பவரை தெரியாது. அசா.9 பூங்கொடி சூசை தெரியும். அசா.10 சீதாலெட்சுமி தெரியாது. அசா.11 ராமலெட்சுமி தெரியாது. அசா.12 பொன்பாண்டியை தெரியாது. அசா.13 சாந்தியை தெரியாது. அசா.14 குணசீலன் தெரியாது. அசா.15 முத்துலெட்சுமி தெரியாது. அசா.16 செல்வகுமாரி ஆகியோர்களை தெரியாது அசா.17 முருகன் தெரியாது. அசா.18 ராமர் மனைவி சரோஜா தெரியாது, அசா.19 குமரேசன் தெரியாது. அசா.20 மணிராஜ் தெரியாது. அசா.21 பொன் சேகர் தெரியாது. அசா.22 சுதா தெரியாது. அசா.23 ரவிகுமார் தெரியாது அசா.24 ஜெயஜோதி தெரியாது. அசா.25 ஜானகி தெரியாது. அசா.26 பவளக்கொடி தெரியாது. அசா.27 தெய்வகனியை தெரியாது. அசா.28 செல்வன் தெரியாது.

அசா.29 குற்றாலராமசுந்தரம் மகன் மாயவன் தெரியாது. அசா.30 அருள்ஜெலஸ்டீன் தெரியும். அசா.31 அன்னபூரணியை தெரியாது. அசா.32 ஜோசப் அந்தோணி ராஜ் தெரியும். அசா.33 முத்துக்கனியை தெரியாது. அசா.34 வசுமதி தெரியாது. அசா.35 இருளப்பன் தெரியாது. அசா.36 முருகன் அசா.37 கெலன் ஞானபிரகாசம் தெரியாது, அசா.38 மரியசுந்தரி ஆகியோர்களை தெரியாது அசா.39 தேன் மொழி தெரியாது. அசா.40 புஷ்பவள்ளி தெரியாது. அசா.41 விஜய் தெரியாது. அசா.42 சரோஜா தெரியாது அசா.43 பாலமுருகன் அசா.44 காளீஸ்வரி தெரியாது. அசா.45 கனகமணி, அசா.46 சகுந்தலா தெரியாது, அசா.47 ஞானப்பிரகாசம் தெரியாது. அ.சா.48 சேர்மக்கனியை தெரியாது. அ.சா.49 மூக்கம்மாள் தெரியாது. அசா.50 முருகன் அசா.51 ஐயப்பன் அசா.52 கவிதா தெரியாது. அசா.53 யோகேஸ்வரி தெரியாது. அசா.54 குமார் தெரியாது. அசா.55 சரஸ்வதி பாப்பா என்பவரை தெரியாது. அசா.56 திருமலை என்பவரை தெரியாது. அசா.57 மரிய அருள்ராஜன் என்பவரை தெரியாது. அசா.58 அற்புத ஜெகன் பிரகாஷ் ஆகியோர்களை தெரியாது.

கடந்த 2018ம் வருடம் மாயவன் கோவிலில் ஆஜர் எதிரிகளிடம் நான் சீட்டு போட்டிருந்தேன். ஆஜர் எதிரிகள் 7 குழுக்களாக சீட்டு நடத்தினார்கள். நான் ரூ.60,000 சீட்டில் 3 சீட்டுகளும், ரூ.61,000 சீட்டில் 1 சீட்டும் போட்டிருந்தேன். மாயவன் கோவிலில் ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணிக்கு சீட்டு பணத்தை வசூல் செய்வார்கள் நான் நேரடியாகவும், தெரிந்தவர்கள் மூலமாகவும் சீட்டு பணத்தை கொடுப்பேன். சீட்டு பணத்தை நான் கொடுக்கும் போது ஒரு நோட்டில் வரவு வைத்து கொள்வார்கள். ரூ.60,000 சீட்டில் 35 வாரங்கள், ரூ.61,000 சீட்டில் 21 வாரங்கள் சீட்டு பணம் கட்டியிருப்பேன். ரூ.500 சீட்டு ரூ.200 கழிவு போக மீதி பணத்தை சீட்டு கட்டி உள்ளேன். பின்னர்இடையில் சீட்டு பிரிக்காமல் இருந்தார்கள். சீட்டு கட்ட போகும் போது அவர்கள் இல்லை. சீட்டு மோசடி செய்து விட்டார்கள் என எல்லோரும் பேசி கொண்டார்கள். நான் எதிரிகள் கோவிலில் நடத்துவதால் நம்பிக்கையின் பேரில் சீட்டு போட்டிருந்தேன். நான் கட்டிய சீட்டு பணம் தற்போது வரை எனக்கு திரும்ப கிடைக்கவில்லை. நடவடிக்கை எடுக்க புகார் கொடுத்தார்கள் என்று கேள்விபட்டேன். யார் புகார் கொடுத்தார்கள் என்று எனக்கு தெரியாது. அப்போது பெண் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>1ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் எஸ்எஸ்எல்சி முடித்து ஐடிஐ படித்துள்ளேன். எந்த பதவியில் இருந்து ஓய்வு பெற்றேன் என்றால் இளநிலை பொறியாளர் இரண்டாம் நிலையிலிருந்து 31.03.2026ல் ஓய்வு பெற்றேன். எங்கள் ஊருக்கும், மாயவன் கோவிலுக்கும் 200 மீட்டர் தூரம் இருக்கும். ரூ.61,000 சீட்டில் மொத்தம் எத்தனை உறுப்பினர்கள் என்று எனக்கு தெரியாது. ரூ.60,000 சீட்டில் மொத்தம் எத்தனை உறுப்பினர்கள் என்று எனக்கு தெரியாது. ரூ.60,000 சீட்டில் என்னோடு உறுப்பினராக சேர்ந்தவர்கள் பெயர் யாராவது சொல்ல முடியுமா என்றால் ஜோசப், அந்தோணி ராஜ், அருள் ஜெலஸ்டீன் ஆகியோர்கள் தெரியும்.

ரூ.61,000 சீட்டில் என்னோடு உறுப்பினராக சேர்ந்தவர்கள் பெயர் யாராவது சொல்ல முடியுமா என்றால் உறுப்பினர்கள் தெரியாது. போலிஸார் என்னை என்று விசாரித்தார்கள் என்றால் 2019 ல் விசாரித்தார். மாதம், தேதி தெரியாது. எங்கள் ஊர்க்காரர்கள் மட்டும் சீட்டில் உறுப்பினராக சேர்ந்தார்களா அல்லது பக்கத்து ஊர்க்காரர்களும் சீட்டில் உறுப்பினராக சேர்ந்தார்களா என்றால் எங்கள் ஊர்க்காரர்களும் இருந்தார்கள். பக்கத்து ஊர்க்காரர்களும் இருந்தார்கள்.

காவல் ஆய்வாளர்கள் என்னை விசாரித்ததாக சொல்லும் போது எங்கள் ஊர்க்காரர்களும், பக்கத்து ஊர்க்காரர்களும் சீட்டு போட்டதாக சொன்னேனா என்றால் என்னை அவ்வாறு விசாரிக்கவில்லை, நீங்கள் சீட்டு போட்டிருக்கிறீர்களா என்று கேட்டார். அதை மட்டும் சொன்னேன். கூலி வேலை பார்ப்பதாக காவல் ஆய்வாளரிடம் சொல்லவில்லை. என்ன வேலை பார்த்தாக சொன்னேன் என்றால் சீட்டு போட்டீர்களா என்று கேட்டார்கள். வேலை பற்றி கேட்கவில்லை. காவல் நிலையத்தில் எந்த தேதியில் புகார் கொடுத்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. காவல் ஆய்வாளர் என்னை ஊருக்கு வந்திருக்கும் போது விசாரித்தார். புகாரில் என்னவிவரம் சொல்லபட்டிருந்தது என்று எனக்கு தெரியாது. பக்கத்து ஊர் என்பதால் மாயவன் கோவிலில் சீட்டு நடத்தும் விவரம் எனக்கு தெரியும். எத்தனை ஆண்டுகளாக அந்த கோவிலில் வைத்து சீட்டு நடந்தது என்ற விவரம் எனக்கு தெரியாது. ஆனால் நான் சீட்டு போடும் போது அங்கு சீட்டு நடந்த விவரம் தெரியும்.அதனால் சீட்டு போட்டேன். காவல் ஆய்வாளர் என்னை விசாரிக்கும் போது புகார் கொடுத்த விவரம் தெரியுமா, விசாரிக்கும் முன்பு புகார் கொடுத்த விவரம் தெரியுமா என்றால் சீட்டு சம்பந்தமாக பிரச்சினை நடந்த போது நீங்களும் சீட்டு போட்டதாக சொல்கிறார்களே, சீட்டு போட்டுள்ளீர்களா என என்னை விசாரித்தார்கள். நான் யார் மூலமாக சீட்டு பணம் கொடுத்தேன் என்றால் ஜோசப் ராஜ் என்பவர் மூலம் கொடுத்தேன். அவரை தவிர வேறு யார் மூலமும் கொடுக்கவில்லை. ரூ.60,000, ரூ.61,000, சீட்டில் இதுவரை எத்தனை பேர் ஏலம் எடுத்தார்கள் என்று எனக்கு தெரியாது.

நான் எத்தனை வாரங்கள் ரூ.60,000, ரூ.61,000 சீட்டில் பணம் செலுத்தியுள்ளேன் என குறிப்பு வைக்கவில்லை. எந்தெந்த வாரங்களில் எவ்வுளவு பணம் கட்டினேன் என குறிப்பிட்டு என்னால் சொல்ல இயலாது என்றால் சரிதான். போலிஸார் என்னை விசாரித்ததாக சொல்லப்படும் போதும் எவ்வுளவு தொகை செலுத்தினேன் என நான் சொல்லவில்லை என்றால் சரிதான். மாயவன் கோவிலை நிர்வாகம் செய்வது சம்பந்தமாக எதிரிகளுக்கும், திமுக ஒன்றிய செயலாளர் மகேஷ் மாயவனுக்கும் ஏற்கனவே பிரச்சினை இருந்த விவரம் எனக்கு தெரியாது. கோவில் நிர்வாகம் சம்பந்தமாக பிரச்சினை உள்ள விவரம் எனக்கு தெரியாது. நான் சொல்வது போல் மாயவன் கோவிலில் வைத்து எதிரிகள் எவ்வித சீட்டும் நடத்தியிருப்பது கிடையாது என்றாலும் நான் கொடுத்தாக சொல்லப்படும் பணத்தை அவர்கள் வைத்திருக்கும் நோட்டில் வரவு வைத்திருப்பது கிடையாது என்றாலும் சரியல்ல. எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் எந்தவித சம்பந்தமமும் கிடையாது என்றால் சரியல்ல. கோவிலை

நிர்வாகம் செய்வது சம்பந்தமாக எதிரிக்கும், மகேஷ் மாயவனுக்கும் பிரச்சினை இருந்து வருவதால் எதிரியை பழிவாங்க வேண்டும் என்பதற்காக கொடுக்கப்பட்ட பொய் புகாரில் என்னையும் சாட்சியாக சேர்த்ததால் நான் அதை அனுசரித்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் எவ்வித வாக்குமூலமும் என்னை விசாரித்து காவல் ஆய்வாளர் பெற்றிருப்பது கிடையாது என்றால் சரியல்ல. பூங்கொடிசூசையின் கணவர் பெயர் தெரியாது, பூங்கொடி சூசைக்கு வெய்க்காலி பட்டி. அருள் ஜெலஸ்டீன் தகப்பனார் பெயர் தெரியாது.

**<u>2ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

முதல் விசாரணையில் சொன்ன விவரத்தை தான் போலிஸ் விசாரணையிலும் சொன்னேனா என்றால் போலிஸ் சீட்டு போட்டேனா எனக் கேட்டார்கள். சொன்னேன். ரூ.60,000 சீட்டில் மொத்தம் 122 வாரங்கள் கட்ட வேண்டும். ரூ.61,000 சீட்டில் மொத்தம் 123 வாரங்கள் கட்ட வேண்டும். ரூ.60,000 சீட்டில் 3 சீட்டும் ஒரே நேரத்தில் போட்டேன். ரூ.60,000 மற்றும் ரூ.61,000 சீட்டில் நான் எவ்வுளவு வாரம் கட்டி உள்ளேனோ அதே போல் தான் என்னுடன் சீட்டு போட்ட மற்றவர்களும் கட்டி உள்ளார்கள் என்றால் சரிதான்.நான் செலுத்திய தொகை தான் என்னுடன் சீட்டு போட்ட மற்றவர்களும் செலுத்தி உள்ளார்கள் என்றால் சரிதான். ரூ.60,000 மற்றும் ரூ.61,000 சீட்டு எப்போது ஆரம்பித்தது என்றால் 2018ல் ஆரம்பித்தது. ரூ.60,000 மற்றும் ரூ.61,000 சீட்டிற்கு தனித்தனியாக ரூ.500ல் கழிவு போக மீதி கட்ட வேண்டும். இரண்டாவது சீட்டை மாயவன் கோவிலுக்கு எடுத்து கொள்வார்கள் என்றால் சரிதான். கோவிலில் இருந்து சீட்டு நடத்துவதால் அந்த பணத்தை கோவிலுக்கு எடுத்து கொள்வார்கள் என்றால் சரிதான். ஏலம் கேட்கும் நபர்களுக்கு கோவிலில் வைத்து பணத்தை கொடுத்து விடுவார்கள் என்றால் சரிதான். சில நபர்கள் ரூ.500 கொடுத்து விட்டு கழிவு தொகையை வாங்கி கொள்வார்கள் என்றால் சரிதான். நான் சொல்வது போல் முதல் விசாரணையில் சொன்னது மாதிரி இந்த வழக்கிற்கும், எதிரிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. எதிரியோ அவருக்கு வேண்டப்பட்டவர் யாருமோ தனிப்பட்ட முறையில் சீட்டு நடத்தவில்லை என்றாலும் சரியல்ல.1ம் எதிரியின் குறுக்கு விசாரணை 2ம் எதிரி தரப்பில் ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

மறு விசாரணை இல்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//– Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi